# சங்க இலக்கிய நூல்களில் அறிவியல்

1

பி.வி.தனலட்சுமி & முனைவர். சிவ.முருகேசன்
உலகநாத நாராயணசாமி அரசுக் கல்லூரி(தன்னாட்சி), பொன்னேரி.
மின்னஞ்சல்: Lakshmi.ralco@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:-**

தமிழ் இலக்கியங்களிலும், பழங்காலத் தழிழர் வாழ்வியலிலும் அறிவியல் செய்திகள் காலந்தோறும் காணக்கிடைக்கிறது. தமிழ் இலக்கணமாய் தோன்றிய தொல்காப்பியம் அறிவியல் சிந்தனையில் உச்சம் பெற்று இன்றைய சூழ்நிலைகளோடு ஒன்றிணைவது சிறப்பாகிறது. திருக்குறள், எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு போன்ற நூல்களில் விஞ்ஞான சிந்தனைகள், அறிவியல் நுட்பங்கள் எனப் பன்முகப்பட்ட பொருண்மையில் சங்க இலக்கிய நூல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**ஆய்வு நோக்கம் :** தமிழ்மொழி பழைமையான மொழியாக இருந்தாலும், இன்றைய நவீன அறிவியல் உலகத்திலும், மேலோங்கி நிற்பதற்கு சங்க இலக்கியம் நூல்கள், அறிவியல் சார்ந்து இருப்பதேயாகும். சங்க கால புலவர்கள் அறிவியலை மையமாகக் கொண்டு உருவாக்கிய இலக்கிய நூல்கள் இறைவன் கொடுத்த பொக்கிசம் ஆகும். இன்றைய அறிவியலில், நாள்தோறும் புதுமை தோன்றினாலும் தமிழர்களுக்கு அவை பழமையானதுதான் என்பதற்குச் சான்று சங்க இலக்கிய நூலாகும்.

**திறவுச்சொற்கள்:-**தொல்காப்பியம், திருக்குறள், புறுநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, பட்டிணப்பாலை, இராமாயணம், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி

**முன்னுரை:**

நவீன உலகில் வளர்ந்த நிலையில் உள்ள விஞ்ஞானம் பலநூறு ஆண்டுகளுக்கு முன் பண்டைய தமிழர்களால் சங்க இலக்கியங்களில் எழுதப்பட்டுள்ளன என்பது மிகவும் ஆச்சர்யமானதாகும். பண்டைய தமிழர்களின் அனுபவமே அறிவியலக இருந்துள்ளன என்பதற்கு சங்க இலக்கியங்கள் சான்றாகின்றன. சங்க இலக்கிய நூல்களில் அமைந்துளள அறிவியல் சார்ந்த கருத்துக்களை முன்வைத்து இக்கட்டுரை அமைந்துள்ளது.

**அணுக் கொள்கையில் சங்க இலக்கியம் :**

**"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டக் குறுகத் தரித்த குறள்"** என்று ஔவையார் திருக்குறளைப் பாராட்டியுள்ளார். திருக்குறளில் கடலைப் போல் பெரிய அர்த்தம் இருக்கின்றது. ஆனால் அணுவைப் போல அதைச் சுறுக்கி, அர்த்தம் மாறாமல், இரண்டு வரிகளில் அடங்கிவிடுகிறது என்று பொருள். இங்கு அணுவைப் (Atom) பற்றி ஔவையார் கூறியிருக்கிறார் என்றால் பண்டைய சங்க தமிழர்கள் அணுவைப் பற்றித் தெரிந்தும், கண்டும் இருக்கிறார்கள் என்பதை உணரமுடிகிறது.

**"சாணிலும் உளன், ஒரு தன்மை அணுவினை சத கூறிட்ட கோணிலும் உளன்"** என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமயணத்தில் குறிப்பிடுகிறார். அணுவை நூறு கூறாகப் பிளந்தால் உண்டாகும் துகளுக்குக் கோண் என்று பெயர். கோண் என்பது துரும்பை விட மிக நுட்பமானது. இறைவனைப் பல கூறுகளாகப் பிரித்தாலும் அவைதனிலும் இறைவன் இருப்பார் என்கிறார். **"உக்கிட அணு ஒன்று ஓடி உதைத்து போலும்"** எங்கோ தூண்டிவிட ஒரு அணு வந்து வெடித்து நாசம் விளைவித்தது என மண்டோதரி தன் மகன் போர்க்களத்தில் மடிந்துக் கிடப்பதைக் கண்டு புலம்புகிறாள் என்று கம்பர் எழுதியிருக்கிறார். அணுவைப் பற்றிய எந்தவித ஆராய்ச்சியும் இல்லாதபொழுது கம்பர் அணுவைப்பிரிக்க முடியும் என்றும் அதற்குக் கோண் என்றும் பெயரிட்டுக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**பஞ்சபூதங்களால் உருவானவை உலகம்:-**

உலகம் தோன்றிய வரலாறு என்பது அறிவியலின் மிகப்பெரிய சாதனை. இத்தகைய வரலாற்று அறிவியலைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சங்க காலத் தமிழ்ப் புலவர்கள் பாடல் வரிகள் வாயிலாக உலகுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

**அ. தொல்காப்பியம்**

3000 ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியரின் கூற்று "உலகம் பஞ்ச பூதங்களால் உருவானவை"

**"நிலம்தீ நீர் வளி விசும்போடும் ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை ஐம்பால் இயல்நெறிவழா அமைத்**
**திரிவு இச்சொல்லொடுதழாஅல் வேண்டும்"-** தொல்காப்பியம் (1589)

நவின அறிவியல் உலகம், நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் அகியவற்றை ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது. எவ்வித அறிவியல் முன்னேற்றம் இல்லாத காலத்தில் தொல்காப்பியர் பஞ்சபூதங்களினால் தான் உலகம் உருவானது என்பதை தொல்காப்பியத்தில் கூறியுள்ளார்.

**ஆ. பரிபாடல்**

சூரியனிடமிருந்து பூமி பிரிந்து நீண்ட காலமாக நெருப்புக் கோளாக இருந்து பின் காலச் சுழலில் குளிர்ந்து பனிப்படலமாக மாறி நிலம் தோன்றியது என்பது உலகத்தார் கூற்று. இதையே பல நூறு ஆண்டுகளுக்கு முன் எழுதிய பரிபாடலில் கூறியுள்ளார்கள். வான்வழியாகக் காற்றும், காற்று வழியாக நெருப்பும்(தீ), தீ வழியாக நீரும், நீர் வழியாக நிலமும் தோன்றி உள்ளது என்பதை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**"கருவளர் வானத் திசையில் தோன்றி**
**உருவறி வாரா ஒன்றன் ஊழியும்**
**உந்துவளி கிளர்ந்த ஊழூழ் ஊழியும்**
**செந்தீச் சுடரிய ஊழியும், பனியொடு**
**தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று**
**உண்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு**
**மீண்டும் பீடுயர்பு ஈண்டி அவற்றிற்கும்**
**உள்ளீ டாகிய இருநிலத் தூழியும்"** - பரிபாடல் (2: 5-12)

**இ. புறநானூறு**

அணுச்செறிந் நிலம் அந்நிலத்தின் ஓங்கிய ஆகாயமும், அவ்வாகாயத்தைக் தடவிவரும் காற்றும், அக்காற்றின் கண் தலைப்பட்ட தீயும், அத்தீயோடு மாறுபட்ட நீருமென ஐவகைப்பட்ட பெரிய பூதத்தினது தன்மைப்பொல எனப் பஞ்ச பூதங்களைப் பற்றிப் புறநாநூற்றுப் பாடலிலும் குறிப்பிட்டுள்ளன என்பதைக் காணமுடிகிறது.

**"மண் திணிந்த நலனும்,**
**நிலன் ஏந்திய விசும்பும்,**
**விசும்பு தைவரு வளியும்,**
**வளித் தலைஇய தீயும்,**
**தீ முரணிய நீரும், என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"**

- முரஞ்சியூர் முடிநாகராயர், புறுநானூறு – 2(1-6)

**ஈ. பதிற்றுப்பத்து**

**"நிலம்நீர் வளிவிசும்பு என்ற நான்கின்**
**அளப்பரி யையே!**
**நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்**
**ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை"**

- சான்றோர் மெய்ம்மறை, பதிற்றுப்பத்து (14:1-4)

நிலமும் நீரும் காற்றும் வானமும் எனச் சொல்லப்படுகின்ற நாற்பெரும் பூதங்களையும் போல என்று குறிப்பிடுவதன் மூலமும், நாளும் கோளும் திங்களும் ஞாயிறும் மிக்க பெருந்தீயுமாகிய ஐந்தும் என்று சொல்லப்படுதன் வாயிலாக அறிவியல்பற்றிய செய்திகளைக் காண முடிகிறது.

**திருக்குறளில் தாவரவியல்**

**"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு"** - திருக்குறள் (595)

தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் அடித்தண்டின் அளவாக இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வும் அவர் மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவாக இருக்கும் என்று தமிழ்ப்புலவர் திருவள்ளுவர் கூறியிருக்கிறார். இதைத்தான் 19ம் நூற்றாண்டில் நீரின் அளவைப் பொறுத்து நீர்த்தாவரம் இருக்கும் என்று கண்டுபிடித்தனர்.

**"தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
**காமத்துக் காழில் கனி".** - திருக்குறள் (1191)

நாம் விரும்புவர் தாமும் விரும்பி இருவரும் உடன்பட்டுத் துய்க்கின்ற இன்பமானது காதலில் விதையில்லாக் கனியை மகிழ்ந்து சுவைப்பதற்கு ஒப்பாகும். விதையில்லாக் கனியைப் பற்றிக் கூறியிருப்பது பண்டைய தமிழர்கள் தாவரவியல் அறிவியலில் திறமையானவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

**திருக்குறளில் நியூட்டனின் 3ம் விதி :** நியூட்டனின் 3ம் விதி என்பது ஒவ்வொரு வினைக்கும் அதற்கு இணையான எதிர்வினை உண்டு. இவ்விதியை திருக்குறளில் திருவள்ளுவர்,

**"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் நமக்குஇன்னா**
**பிற்பகல் தாமே வரும்"** - திருக்குறள் (319)

மற்றவர்களுக்குத் தீமையைக் காலையில் செய்தால், நமக்குத் தீமை நம்மைத் தேடி மாலையில் தானாக வரும் என்று இக்குறள் வாயிலாக அறிவியல் செய்தி புலப்படுகிறது.

**நிலவு அறிவியல் சங்க கால இலக்கியங்களில் :-**

**"அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
**மறு உண்டோ மாதர் முகத்து"**

- திருக்குறள் (1117)

அறுவாய் எனக் குறிப்பிடுவது நிலவில் காணும் குழிகளாகும். மாதர் முகத்தில், நிலவில் உள்ளது போன்ற மறுக்கள் இல்லை என்று குறிப்பிடுகிறார். நிலவில் பல குழிகள் இருக்கின்றன என்பதை நவீன அறிவியல் உலகம் கண்டுபிடித்துள்ளன. ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன் கூறியிருப்பதால், நிலவைப் பற்றிய அறிவியல் ஞானம் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். சந்திரன், அமாவாசை அல்லது பௌர்ணமி என்ற நிலை மாறி மாறி வருவதற்குக் காரணம், சுயமாக ஒளிரும் திறன் சந்திரனுக்கு இல்லை. சூரியனாலேயே ஓளியூட்டப்படுவதாக அமைந்திருப்பதால் இம்மாறுபாடு நிகழ்கிறது. பௌர்ணமியன்று விடிவெள்ளியின் ஒளிபோல் விண்ணில் சந்திரன் முழு ஆட்சி செய்யும். ஏனென்றால் சந்திரன் சூரியனுக்கு 180-டிகிரி கோணத்தில் நேர் எதிரே அமைந்திருக்கும்.

**"வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்**
**ஓங்கு உயர் மலையத்து உச்சி மீமிசை**
**விரி கதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி,**
**இரு மருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து"**

- சிலப்பதிகாரம், காடுகாண் காதை (41)

திருவேங்கடத்தில் இருமருங்கிலும் எதிரெதிரே நிலவும் ஞாயிறும் இருப்பது போல என இவ்வரிகள் மூலமாகப் பௌர்ணமியின் அழகுக் காட்சியை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். இதையே மெய்ப்படுத்தியுள்ளது மணிமேகலை வரிகளும்

**"குணதிசை மருங்கில் நாண்முதிர் மதியம்**
**குடதிசை மருங்கில் சென்று வீழ் கதிரும்"**

- மணிமேகலை (5:119)

குணதிசை என்பது கிழக்கு திசை, முதிர்மதியம் என்பது முழுநிலவு, குடதிசை என்பது மேற்கு திசை, சென்றுவீழ்கதிர் என்பது கதிரவன். கதிரவன் எதிரே நிலவு இருந்தால் வெளிச்சமாக இருக்கும் என்பதை கூறியுள்ளார் சீத்தலைச் சாத்தனார்.

**விண்மீன்களும் கோள்களும் :-**

சங்க இலக்கியங்களில் விண்மீன்களை “மீன்” எனவும், கோள்களைக் “கோள்”என்றும் குறிப்பிட்டுள்ளனர். தாமே ஒளிவிடக்கூடியன நாள்மீன்கள் என்றும், சூரியனிடமிருந்து ஒளி பெற்று ஒளிர்வன கோள்மீன்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. விண்மீன்களை உவமையாகக் கொண்டு பல சங்க இலக்கிய நூல்கள் இருக்கின்றன.

**“மதியம் கெடுத்த வயமீன் எனத்தம்பி மாழார்ந்து**
**உதிதற்கு உரியாள் பணியால் உடன் ஆயவாயும்”**

- சீவகசிந்தாமணி (23)

நிலவைப் பிரிந்த ரோகினிபோல நந்தட்டன் சீவகனைப் பிரிந்து வாடினான் என்று குறிப்பிடப்பட்டுள்ளார் திருத்தக்க தேவர்.

**“நீல்நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்**
**நாள் மீன்விரா அய கோள்மீன் போல”**

- பட்டினப்பாலை (67-68)

நீல நிறத்தை உடைய வானத்தில் வலது புறமாக எழுந்து திரியும் நாள் மீன்களுடன், கூடி நிற்கும் கோள் மீன்கள்போல என்று இருப்பதாகச் சங்க புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியிருக்கிறார் என்றால் விண்மீன்கள் மற்றும் கோள்களைப் பற்றிய செய்திகள் அவர்களுக்குத் தெரிந்து இருக்கின்றன. வியாழன் கோளும் ஒளிமிகுந்து இருப்பதாகச் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. வியாழன் கோளை மறைப்பதற்காக, சந்திரன் சில காலங்களில் மிக அரிதாக வானில் நகர்ந்து செல்லும். சந்திர-சூரிய கிரகணங்கள் மட்டுமின்றி இவையும் ஒரு வான் மறைப்பாகும். சந்திரனுக்கு மிக அருகே வியாழன் நெருங்கி வரும். இத்தகைய கோள் அறிவியலைச் சீவக சிந்தாமணியில் திருத்தக்க தேவர் அழகாகக் கூறியுள்ளார்.

**“மண்டலம் நிறைந்த மாசில் மதிப்புடைய வியாழம் போன்று ஓர்**
**குண்டலம் இலங்க................”**

- சீவகசிந்தாமணி (619)

தத்தையின் முகமும் குண்டலமும் அருகருகே நிற்கும் நிலவும் வியாழனும் போல என்று எவ்வளவு நேர்த்தியாகச் சொல்லியுள்ளார்கள்.

16ஆம் நூற்றாண்டில் தொலைநோக்கிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தான் சனிக்கோளுக்கு வளையம் உள்ளது என்று கண்டறியப்பட்டது. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னாள் சங்க இலக்கிய புலவர் கபிலர், புறநானூற்றில் சனிக்கோள் புகைந்து, வளையம்போல அமைய, அப்புகை அதனைச் சூழ்ந்து காணப்படுவதாகக் குறிப்பிட்டு இருப்பது தமிழன் என்ற பெருமிதத்தைக் கொடுக்கிறது.

**“மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்**
**தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்”**- புறநானூறு (117)

இதையே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

**“கரியவன் புகையினும், புகைக்கொடி தோன்றினும்**

**விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்...”** - நாடுகாண்காதை (102-103)

**வானூர்தி - (விமான அறிவியல்)**

நவீன உலகில் விமானம் கண்டுபிடிப்பு ஆச்சர்யமானதாக இருந்தாலும், இவற்றைப் பற்றிச் சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் சொல்லப் பட்டிருப்பது, வானூர்தி பண்டைய தமிழர்களிடம் இருந்திருக்கலாம் இல்லை அவர்களிடம் அதைப் பற்றிய அறிவியல் இருந்திருக்கின்றன் என்பதில் ஐயமில்லை.

**“வலவன் ஏவா வான ஊர்தி”**

- புறநானூறு (27:8)

“வல்” என்பதற்கு விரைவு என்று பொருள். “வலவன்” என்றால் விரைவாக ஓட்டுபவர் என்று பொருள். ஓட்டுபவர் இல்லாத வான ஊர்தி என்று பொருள்படுகிறது. இதன் வரிசையில்,

**“வான வூர்தி ஏளினள் மாதோ”**

- சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், கட்டுரைக்காதை (199)

இவ்வரிகளில் கண்ணகி கோவலனுடன் வானூர்தியிலேறி சுவர்க்கம் சென்றார் என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டிருக்கிறார். கம்பர் இராமயணத்திலும், இராவணன் சீதையை அவள் இருந்த குடிலோடு பெயர்த்து வானவூர்தியில் எடுத்துச் சென்றான் என்றும், கொஞ்ச நேரம் தரையில் ஒடிய பின்தான் வானத்தில் பறந்ததாகச் சொல்லப்படுகிறது. “எந்திரத்தேர் பற்றி ஆரண்ய காண்டம், சடாயு உயிர்நீத்தப்படலத்திலும் கூறப்பட்டிருக்கின்றன.

**திருக்குறளில் சந்திரகிரகணம்**

**“கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**

**திங்களைப் பாம்புகொண் டற்று”**

- திருக்குறள் (116)

காதலரைக் கண்டது ஒரு நாள்தான். அதனால் உண்டாகிய அலரோ, திங்களைப் பாம்பு கொண்ட செய்திபோல் எங்கும் பரந்து விட்டது. இங்குத் திங்களைப் பாம்பு பிடித்தது போல எனக்குறிப்பிடுவது சந்திர கிரகணத்தையாகும். பல்வேறு வகையான ஆய்வுகளை ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட பின்பே நவீன அறிவியல் அறிஞர்கள் கிரகணங்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்துக்கொள்ள முடிந்தது. ஆனால் திருவள்ளுவர் சந்திர கிரகணங்களை உவமையாகக் கூறியிருப்பது வியப்பாகும்.

**உழவுத் தொழிலும் சுழலும் பூமியும்**

**“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை”**

- திருக்குறள் (1031)

பல மாற்றங்களுடன் சூழலும் உலகம் உழவுத்தொழிலை பின்பற்றியே இருக்கும். ஆகையால் பல தொழில் பழகியும் உழவே தலைமையானது என்றும்,

**"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்".** - திருக்குறள் (1037)

ஒரு பலப் புழுதியானது காற்பலமாக ஆகும்படி உழுது காய விடுவானானால், அதனிடம் செய்த பயிர், ஒரு பிடி எருவு இடுதலையும் வேண்டாமலே நன்றாக விளையும். வேளாண்மை குறித்தும் திருவள்ளுவர் கூறியிருப்பதைக் கண்டால். வேளாண்மை அறிவும் தமிழர்களிடம் இருந்தது என்பதில் ஐயமில்லை

**மருத்துவத்தில் சங்க இலக்கியம்:-**

**திருக்குறள்:-;** உணவே மருந்தாகும் என்ற கொள்கையை, திருவள்ளுவர் கூறியுள்ளார்.

**"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு".**

- திருக்குறள் (945)

உடலுக்கு மாறுபாட்டைச் செய்யாத உணவையும், தன் மனம் விரும்பியபடி அல்லாமல் நோய் வராத அளவினாலே உண்பானானால், அவனுக்குப் பிணிகளால் துன்பமில்லை. மருத்துவத்திலும் சங்க காலப் புலவர்கள் புலமையுடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதல் ஐயமில்லை.

**புறநானூறு :-** வேல் பாய்ந்த புண்ணில் பஞ்சு வைத்துக் கட்டினார்கள்

**"உழக்கிக் குருதி ஓட்டி,**
**கதுவாய் போகிய துதி வாய் எஃகமொடு,**
**பஞ்சியும் களையாப் புண்ணர்,**
**அஞ்சுதகவு உடையர்இவள் தன்னைமாரே".**

- புறநானூறு - 353 (16)

என்ற பாடல் வரியின் பொருள் யாதேனில் தலைவியைப் பெண் கேட்டு வந்த வேந்தரை எதிர்த்துப் போரிட்டு ஓட்டிவிட்டு இவளது அண்ணனும், தந்தையும் தன் மீது பட்ட புண்ணில் வைத்துக் கட்டிய பஞ்சைக் கூட இன்னும் களையாமல் வேலைத் தீட்டிக் கொண்டு காத்திருக்கின்றனர் என்பதாகும். இதன் வாயிலாக, சங்க காலம் முதலே தமிழர்கள் பஞ்சைப் பயன்படுத்தி போர் வீரர்களுக்குக் காயப்பட்ட இடத்திலிருந்து வழியும் குருதியை நிறுத்தப் பஞ்சு என்ற மருந்து பொருளைப் பயன்படுத்துவதைத்தான் நவீன சிகிச்சை முறையில் கையாளப்படுகிறது என்பது புலனாகிறது. பண்டைய தமிழர்கள் மருந்துப் பொருள்களைப் பயன் படுத்துவதில் திறமையானவர்கள் என்பதை உணர்த்துகின்றன.

**நிறையுரை:-** சங்க கால இலக்கியங்கள், கவிதைகளாக மட்டுமில்லாமல் அறிவியல் சார்ந்தது என்பதை உணர்ந்துக் கொள்ளமுடிகிறது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான திரிகடுகம். ஏலாதி,

சிறுபஞ்சமூலம் ஆகிய மூன்றும் பெயரிலேயெ மருத்துவப் பெயாரைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. சங்க கால இலக்கியங்களில் உள்ள அறிவியலை அறிந்து உணர்ந்து பயன் பெற்று வாழ்வோம்.

**துணைநூற்பட்டியல்:-**


1. முனைவர்.ப. ஐயம்பெருமான், தமிழக வானவியல் சிந்தனைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு 2006.
2. அறிஞர். பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் அறிவியல் கலை, சேகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1991
3. பேராசிரியர். அ.சக்கரவர்த்தி, திருக்குறள், சாது அச்சுக்கூடம், சென்னை
4. டாக்டர்.ரா.சீனிவாசன், புறநானூறு செய்யுளும் செய்திகளும், அணியகம், சென்னை. முதற்பதிப்பு 2000
5. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, காந்தி வித்தியாலயம். தஞ்சை. முதற்பதிப்பு 1977